**தலைப்பு 04 – மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 04 – மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 03 ஆம் திகதி பதிவாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டுப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை | 2.3 |
| | | 2. உள்ளகக் கணக்காய்விலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | மனித வளங்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.5 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுதல். | உள்ளகக் கணக்காய்வு | 2.4 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பிரதான பணிகள்

(அ) அரசியலமைப்பு அலுவல்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் அதிகாரத்தை அமுல்ப்படுத்துதல்.

(ஆ) அடிப்படை உரிமைகள் தொடர்பான நீதிமன்ற அதிகாரம்.

(இ) இறுதி மேன்முறையீட்டு அதிகாரம்.

(ஈ) மதியுரை நீதிமன்ற அதிகாரம்.

(உ) தேர்தல்கள் மனு (சனாதிபதி தேர்தல்) தொடர்பான நீதிமன்ற அதிகாரம்.

(ஊ) எவ்விதத்திலேனும் பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்படுவது தொடர்பான நீதிமன்ற அதிகாரம்.

(எ) பாரளுமன்றச் சட்டத்தால் விதிக்கப்படக்கூடிய பிற நீதிமன்ற விடயங்கள் தொடர்பான நீதிமன்ற அதிகாரம்.

(ஏ) சட்டத்தரணிகளை சேர்த்துக்கொள்ளுதல், ஆட்சேர்ப்புச் செய்தல், இடைநிறுத்துதல் மற்றும் நீக்குதல்.

### 2.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கால எல்லையினுள் பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க அறிக்கையிடப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பான நடவடிக்கைகள் இறுதியாக்கப்பட்டு அறிக்கைகள் ஒவ்வொரு நிதியாண்டின் மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2016 | மீண்டுவருபவை | 131.0 | 108.6 | 22.4 | 17 |
| | மூலதனம் | 43.6 | 38.4 | 5.2 | 11.9 |
| | **மொத்தம்** | **174.6** | **147.0** | **27.6** | **15.8** |
| 2017 | மீண்டுவருபவை | 137.2 | 129.5 | 7.7 | 5.6 |
| | மூலதனம் | 56.3 | 53.3 | 3 | 5.1 |
| | **மொத்தம்** | **193.5** | **182.8** | **10.7** | **5.5** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 0.92 மில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் எதுவும் பயன்படுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை**

10 செலவின விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 4.14 மில்லியன் மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் மொத்தம் ரூபா 12.15 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 15 சதவீதம் தொடக்கம் 95 சதவீதம் வரையான வீச்சிலான அளவில் காணப்பட்டது.

**2.4 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**2.5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 23 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 22 ஆகவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 01 ஆகவும் காணப்பட்டதுடன் 2018 ஒக்தோபர் 17 இல் உள்ளவாறான பதவியணி வெற்றிடங்களின் எண்ணிக்கை 02 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்காக மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளினால் (தலைப்பு 04) ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 87.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.